

Tamil Comics Ulagam - King Viswa

Old : 1 Gold : 5

# OLD IS GOLD



வாசக நண்பர்களே,

வணக்கம். தலைமுறைகளைத் தன் வசப்படுத்தியிருக்கும் [illegible] டாப் ஹீரோக்களின் golden - oldies சாகஸத்தோடு மீண்டும் [illegible] முறை உங்களை சந்திக்கிறேன்!

"இரும்புக் கை மாயாவி" - முத்து காமிக்ஸின் சரித்திரம் படைக்கும் முதல் இதழாக வந்திட்ட இதழ் என்பது நம் ஆரம்ப கால வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்! தமிழில் சித்திரக் கதைகளுக்கு இலக்கணம் வகுத்திட்ட path-breaker இது என்று சொன்னால் மிகையாகாது! படம் பார்க்க மட்டுமே தெரிந்த அந்த அரை டிராயர் வயதில் - கதையைப் புரிந்து கொள்ள முடிந்திடாவிட்டாலும்; சித்திரங்களையும், மாயாவியை நள்ளிரவடிக்கும் போது குத்திக் கொன்றிட வரும் பொம்மையையும்; சட்டை கோட் அணிந்து பாரிஸின் வீதிகளை கலங்கடிக்கும் ரோபோ கும்பலையும் ரசித்திட்ட நினைவுகள் இன்றும் என் நெஞ்சில் உள்ளன! புதிதாய் படிக்கும் இளம் வாசகர்களுக்கும்; பழசை அசை போட்டிடும் "பழம்" வாசகர்களுக்கும் இது நிச்சயம் ஒரு சிலிர்ப்பூட்டும் அனுபவமாக அமைந்திடுமென்பது உறுதி!

ஸ்பைடரின் "கல் நெஞ்சன்" ஜூன் 1987'ல் வெளிவந்திட்டது! "ஸ்பைடர் மேனியா" உச்சத்திலிருந்த போது வெளிவந்த இதழ் இது! ஆக்ஷன்; ஸ்பைடரின் அசகாய சாகஸம் என்று ஜாலியாகப் போகும் கதை இது! நிச்சயம் ரசித்திடலாம்!

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்! அது வரை adios!

அன்புடன்,
S. விஜயன்.



காமிக்ஸ் கிளாசிக்ஸ் வெளியிடுவோர்

பிரகாஷ் பப்ளிஷர்ஸ்,
தபால் பெட்டி எண் : 374, 8/D-5, சேர்மன் P.K.S.A.A. ரோடு,
அம்மன் கோவில்பட்டி, சிவகாசி - 626 189. ஆசிரியர்: S. விஜயன்.
அச்சிட்டோர் : தி விஜய் புக்ஸ்,
Phone : 04562 - 72649 Fax : 04562 - 75159
e-mail : lion vsnl.com

# கல்நெஞ்சன்


ஸ்பைடர் ஈடு இணையற்றதொரு
வீரன்! அற்புதமான வலைத் துப்
பாக்கியையும், ஹெலி-காரையும்
பயன்படுத்தி அவன் நடாத்திய
சாகஸங்கள் கணக்கிலடங்கா-!
ஒரு காலத்தில் குற்றச்சக்கரவர்த்
தியாக திகழ்ந்து வந்த இந்த வலை
மன்னன்- இன்று நியாயத்தின் காவ
லனாக செயல்பட்டு வந்தான்!
எனினும் புதிதாக முளைத்த மிஸ்டர்
ஸ்டோன் எனும் நயவஞ்
சகன் ஸ்பைடரின் பராக்கிர
மத்திற்கு ஒரு சவாலாக வந்து
அமைந்தான்-!


விபரீதத்தின் முதல் வித்து முளைத்தது அமெரிக்காவின் ஹைபர்க் நகரில்-மேகமடர்ந்த ஒரு நாள் இரவு, சக்தி வாய்ந்த கார் ஹெட்லைட்டின் ஒளி வெள்ளத்தில் சிக்கினான் ஒரு தளர் நடை மனிதன்!
ஹேய்-என்ன செய்கிறீர்கள்? அந்த லைட்டை அணைத்துத் தொலையுங்கள்!
காரினுள்-
அதே மாதிரியான ஒடிசலான தோற்றம்! அருமையான ஒற்றுமை!


அருகிலிருந்த ஜன்னல் வழியாக ஒரு கிழவன் நடப்பவற்றைப் பார்த்துக் கொண்டிருந்தான்!
நீ-நீங்கள் போலீஸ்காரர்கள் இல்லை! என்னை போக விடுங்கள்! நான் எந்தத் தப்பும் பண்ணவில்லை!
நாம் தேடிக் கொண்டிருப்பது கிடைத்து விட்டது நண்பர்களே! பிடியுங்கள் அவனை!
மறுநாள் காலை-நகர போலீஸார் அலுவலகத்தில்!
அடுத்த வேளை சவாத்திற்குக் கூட காசில்லாத அந்தப் பயலை கடத்துவதில் யாருக்கு என்ன லாபம் இருக்க முடியும்?
இதில் ஏதோ சூது உள்ளது சார்!


இந்த ஒரு மாதத்தில் மட்டும் இதே போன்று ஐந்து பரதேசிகள் கடத் தப்பட்டிருக்கிறார்கள்!
யெஸ்! ஹைபர்க் நகரில் ஏதோ கொடிய நிகழ்ச்சி நடக்கவிருக்கிறது என்று என் உள்ளுணர்வு சொல்கிறது! எதற்கும் தயாராக இருக்க வேண்டும் நாம்!
ஒரு மாதம் கழித்து, கமிஷனர் எதிர்பார்த்தது போல ஒரு விபரீதம் உரு-வெடுத்தது! ஆனால் அதற்கும்-கடத்தல்களுக்கும் சம்பந்தம் இருப்பதாகத் தெரியவில்லை!
வெல்கம் கமிஷனர் சார்! புதிய சிலைகளையும், ஓவியங்களையும் கண்டு களிப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தப் பிரத்தேயகக் காட்சிக்கு வந்தமைக்கு நன்றி!
நீங்கள் நினைப்பது போல சிலைகளைப் பார்வையிட நான் இங்கு வரவில்லை! இங்குள்ள சிலைகளில் ஒன்று மிகவும் விசேஷமானது என்று எங்களுக்கு தகவல் வந்தது!


அடுத்து வந்திறங்கிய நபரைக் கண்டு பார்வையாளர்களிடையே சலசலப்பு ஏற்பட்டது!
அது யாரென்று தெரிகிறதா? சமீபத்தில் ஹைபார்க் வந்து சேர்ந்துள்ள கோடீஸ்வரக் கலைஞர் இவர்!
ஆமாம்! ஊருக்கு வெளியே விசித்திரமானதொரு வீடு கட்டி வசிக்கிறார்!
சரியான கல்லுளி மங்கன் தான்! யாருக்குமே இவரைப் பற்றி எந்த விபரமும் தெரியவில்லை!
THE HIGHBURGH MUSEUM OF ART
கைதேர்ந்த சிற்பி என்று சொல்கிறார்கள்! இன்றுகூட, இரு சிலைகளை அன்பளிப்பாக வழங்கியிருக்கிறாராம்!


கனவான்களே! மீட் மிஸ்டர் ஸ்டோன்! பிரபல சிற்பியான இவர் நமக்கு இரு அரிய சிற்பங்களை அன்பளிப்பாகத் தந்துள்ளார்! அவற்றை இப்பொழுது அவரே திறந்து வைப்பார்!
தேங்க் யூ! இந்த சிலைகளுக்கு ''குற்றத்தின் பரிமாணங்கள்'' என்று பெயரிட்டுள்ளேன்?
குற்றத்தின் பிரதிநிதியாக ரௌடி ரெம்மோவை சிலையாக வடித்துள்ளேன் பல நூற்றுண்டுகளுக்கு முன்னர் இவன் பயங்கரக் கொலைகாரனாக உலவி வந்தான்-!
த-தத்ரூபமாக உள்ளதே! எந்த நேரமும் உயிர் பெற்று நடந்து விடக்கூடியதுபோல காட்சியளிக்கிறது!


பின்னர், இரண்டாவது சிலையும் திறந்து வைக்கப்பட்டது!
குற்ற ஒழிப்பின் தலை சிறந்த 'பிரதிநிதியாக இதோ-
ஸ்பைடர்! அச்சாக ஸ்பைடர் போலவே இருக்கிறது!


இந்த நிகழ்ச்சியைக் கௌரவிக்க எனது பிரத்யேக அழைப்பின் பேரில் வந்திருக்கிறார் நமது வலைமன்னன்!
வாவ்!


ஸ்பைடரின் கண்களில் மிளிர்ந்த திருப்தியை கவனித்தார் ஸ்டோன் -
ஆஹா- உங்களின் தாராள குணத்தை பெரிதும் நான் பாராட்டுகிறேன்!
சிலை உனக்கு மிகவும் பிடித்துப் போய் விட்டதென்று நினைக்கிறேன்- நீதியையும் நியாயத்தையும் நிலை நாட்டுவதற்காக நீ புரிந்துவரும் சாதனைகளுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் இதே போன்ற இன்னொரு சிலையை உனக்காக செய்து தர தீர்மானித்துள்ளேன்!
ஸ்பைடருடன் சகாவான ஆர்டினியும் வந்திருந்தான்-
அடடா! எனது தீர்க்கமான தெளிவான முக அமைப்பை எவ்வளவு நேர்த்தியாக வடித்துள்ளார் என்று பார்த்தாயா ஆர்டினி? என் கண்ணே பட்டுவிடும் போலிருக்கிறது!
என்ன இருந்தாலும் இந்த மண்டைக்கனம் மட்டும் இவரை விட்டுப் போகாது- இந்த ஓநாய் மூஞ்சைப் பார்த்து ரசிக்க வேண்டிக் கிடக்குதாக்கும்! கோரம் பிடுங்கித் தின்கிறது!


இரண்டு மணி நேரங்கள் ஓடின.
கமான் பாஸ்- நம்மைத் தவிர மற்ற எல்லோரும் போய் விட்டார்கள்!
அவசரப்படுத்தாதே.சனியனே- இது போன்ற அரிய பொக்கிஷத்தை நிதானமாகத்தான் கண்டுகளிக்கவேண்டும்!
நள்ளிரவுக்கு மேல்- வெறிச்சோடி போய் கிடந்த மியூசியத்-தினுள் ரோந்து வந்து கொண்டிருந்தான் காவல்காரன்-
எல்லா அறைகளும் பூட்டி இருக்கின்றன- எவனும் உள்ளே நுழைய முடியாது!


அவனுடைய உள்ளுணர்வின் உந்துதலால் திடீரெனத் திரும்பிய காவலாளி பீதியில் உறைந்து போனான்.
காலடிச் சப்தங்கள்.. இந்தப் பக்கமாக வருகின்றது!


டார்ச் ஒளியில் ஒரு மயிர்க் கூச்செறிய வைக்கும் உருவம் தெரிந்தது.
சி..சிலை உயிர்பெற்று நடமாடுகிறது!


என்னை- என்னை விரட்டுகிறது-ஆ-ஆ-ஆ!


தலைதெறிக்க அடுத்த அறையினுள் ஓடினான் அந்த காவலாளி! ஆனால்-
இரண்டாவது சிலையும் ந-நடக்கிறதே!


பிடறியில் திடும் என விழுந்த அறை அவனை விழச் செய்தது -
நோ! நோ! என் கிட்டே வராதீர்கள்! ஒழிந்து போங்கள்!
சுவற்றில் தொங்கிக் கொண்டிருந்த அரிய ஓவி யங்களை அந்தக்கற்பிசாசு கள் அப்புறப்படுத்திய போது காவலாளி நினை விழந்திருந்தான்-


இறுக்கமாய் பூட்டப்பட்டிருந்த இரும்பு ஜன்னல்கள் உட்புற மாய் திறக்கப்பட்டன-
மறுநாள் காலை-நியூயார்கிற்கு புறப்படத் தயாராகிக் கொண்டிருந்தான் ஸ்பைடர்! அப்பொழுது-
பாஸ்! பாஸ்! இந்த செய்தியைப் பாருங்கள்!


கோபத்தில் கொந்தளித்தான் ஸ்பைடர்-
திமிர்பிடித்த சொறி நாய்கள்! ஓவியங்களைத் திருடியதோடு எனது சிலையையும் திருடி விட்டார்கள்!
ஆமாம்-அதோடு உங்கள் முகத்திலும் கரியை பூசிவிட்டார்கள். அதாவது-வந்து-சில மணி நேரங்களுக்கு முன்னர்தான் நீங்கள் அங்கு இருந்தீர்கள்! ஆனாலும்-
முதன்முறையாக, தன் பெயருக்கு ஏற்பட்ட இழுக்கைக் கூட பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை ஸ்பைடர்!
உங்களைப் பார்த்து கொள்ளைக்காரன் சிரிப்பான்!
வாயை மூடடா மடையா! மிஸ்டர் ஸ்டோன் எனக்காக இன்னொரு சிலை வடித்துத் தருவதாகச் சொல்லியிருந்தார்! ஆனால் ஒரிஜினலே இப்பொழுது களவு போய்விட்டதால்- அவரால் டுப்ளிகேட்டை செய்ய இயலாதே!
உடனடியாக செயல்பட்டான் ஸ்பைடர்-
மிஸ்டர் ஸ்டோனின் வீட்டுக்குப் போ! க்விக்!
அ-அந்த வீட்டிற்கா? அந்தப் பக்கமாய் போகும் போதெல்லாம் எனக்கு நடுக்க மெடுக்கும்!
16


ஊருக்கு வெளியே அமைந்திருந்த மிஸ்டர் ஸ்டோனின் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தனர்.
அந்த டாக்ஸி டிரைவர் சொன்னதில் தப்பில்லே! எனக்கே கூட இந்த வீட்டைப்பார்த்தால் நடுக்கமாகத்தானிருக்கிறது! திரும்பும் ப்க்கமெல்லாம் கற்சிலைகள்! சே. சரியானகிறுக்கன்!
நாகரிகமற்ற முண்டம் நீ! இவற்றை எல்லாம் ரசிக்க உனக்கு மூளை பற்றுது! பேசாமல் என்னுடன் வா!


இறுக்கமானதொரு அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.
ஆஆ! ஸ்பைடர்'! கஙேக்கு இன்று பெரும் இழப்பு நேர்ந்து விட்டது. சிலை திருட்டைப்பற்றி நீயும் கேள்விப்பட்டிருப்பாயே!
பட்லரின் முகவரையைப் பார்த்தால் சகிக்கவில்லை!


சிலைகளை சூறையாடிச் சென்ற கயவர்களை மடக்கிப் பிடிக்க தயாராகி இருப்பாயே-? என்னைப் பார்க்க வந்ததும் அது சம்பந்தமாகத் தானே?
ஸ்டோன் தலையை ஆட்டினார்- சோகமாக-
நண்பரே, ஒரிஜினல் சிலையே களவு போய் விட்ட பின், நகல் எப்படி தயாரிப்பதாம்?
வ-வந்து இல்லை மிஸ்டர் ஸ்டோன்? எ-எனக்கு பிரத்யேகமாக ஒரு சிலை செயது தருவதாக சொன்னீர்களே- அதைப் பற்றி-
திரும்பவும் ஒரு புதிய சிலை செய்து தந்தீர்களேயானால் அதற்கான கிரயத்தைத்தர தயாராகயிருக்கிறேன்?
ஸ்பைடர்-ஐயம் ஏ பிசி மேன்! இதுபோன்ற வேலைகளை நான் ஏற்றுக் கொள்வதில்லை! அப்படியே ஏற்றுக் கொள்வதாக இருந்தாலும், எனது பீஸ் மில்லியன் டாலராக இருக்கும்!
மி - மில்லியன் டாலரா?


ஸ்பைடரின் முகம் தொங்கிப் போயிற்று! நியாயக் காவலனாக மாறிய தற்குப் பின் அவனிடம் ஏது அவ்வளவு பணம்!
என்னைப் போன்ற தலைசிறந்த கலைஞர்களின் திறமைக்கு மில்லியன் டாலரே குறைந்த சன்மானம்தான் என்பது உனக்குப் புரிந்திருக்கும் ஸ்பைடர்? மில்லியன் டாலர் தயார் செய்துவிட்டு என்னிடம் வா!
நா-நான் எங்கே போவது அத்தனை பணத்திற்கு!
அதோ போகிறான் பார் பைத்தியக்காரன்! விஷயம் புரியாத ஜடம்!
என்ன இருந்தாலும் ஸ்பைடரை இந்த விஷயத்திற்குள் இழுத்திருக்கவே தேவையில்லை பாஸ்! வேறு யாராவது ஒரு பயலின் சிலையை செய்திருக்கலாம்!


இவனால் நிறைய
சிக்கல் ஏற்படக்
கூடும்!
ஆபத்தானவன்!
அவனை இங்கு வரவழைத்ததன் காரணமே
அதுதான்! மடப் பசங்களா! சட்டத்தை
எதிர்த்து செயல்படும் அனைவரும் அந்த
அற்பனின் பெயரைக் கேட்டாலே நடுங்கு
கின்றனர்! ஆனால் இந்த ஸ்டோன் மட்டும்
அதற்கு ஒரு விதிவிலக்கு!
நான் ஒரு மாமேதை! குற்ற
வியலின் தலைசிறந்த கலைஞன்!
எனது ஒப்பற்ற மதியூகத்தின்
முன்னர், ஸ்பைடர் நசுங்கிச்
சாவதை நான் கண்டுகளிக்க
வேண்டும்! இந்த ஸ்டோ
னின் பெருமை உலகம்
முழுவதும் பரவ
வேண்டும்!


சரி, சரி, இந்த சிலந்திப் பயலைப் பற்றிய வெட்டிப் பேச்சு போதும்! எனக்கு வேறு வேலை உள்ளது! அடுத்த ஆசாமி ரெடியா?
யெஸ் பாஸ்! நீங்கள் சொன்னது போலவே உடை அணியவைத்து தயாராக வைத்திருக்கிறோம்!
பளிங்குப் படிகள் மாளிகையின் கீழ் தளத்திற்கு இட்டுச் சென்றன-
இந்தப் பயல் வந்த நேரத்திலிருந்து அலறிக் கொண்டேதான் இருக்கிறோம் பாஸ்! சரியான சாவுகிராக்கி!
ப்ளீஸ்! எ-என்னை ஒன்றும் செய்து விடாதீர்கள்! என்னையும் அவர்களைப் போல் மாற்றி விடாதீர்கள் ப்ளீஸ்!
21


கைதியின் கருணை மனுக்கு செவி சாய்க்கவில்லை அந்தக் கல்நெஞ்சன்!
ம்ம்ம் - தள்ளிச் செல்லுங்கள்! பெட்டியில் கொண்டுபோய் அடையுங்கள்!
நோ! உங்கள் காலில் விழுந்து கெஞ்சிக் கேட்கிறேன்! ப்ளீஸ்!
கேட்டுக் கொள்ளடா முண்டம்! உன்னை என்ன செய்யப் போகிறேன் என்று தெரியுமல்லவா? ஒழுங்காக என் வேலைகளையெல்லாம் செய்தாயானால் உன்னை பழைய நிலைக்கு கொண்டு வருவேன்!


பின்னர்.
ஆனால் இப்போதைக்கு இந்த மிஸ்டர் ஸ்டோனின் கலைப் பொக்கிஷங்களில் ஒன்றாக மாறப் போகிறாய்!
ஒரு மணி நேரத்திற்குப்பின் கண்ணாடிப் பெட்டகம் திறந்தது. சற்று முன்னர் வரை சாதாரண மனிதனாக இருந்த அந்த உருவத்தைப் பிணைத்திருந்த எஃகுப் பிடிப்புகள் தளர்த்தப்பட்டன.
பாறாங்கல்லைப் போல் இறுகி விட்டான் பாஸ்! அருமையாக முடித்து விட்டீர்கள்!
ஆமாம்! நம் காரியத்திற்கு கச்சிதமாகப் பொருந்துவான்!


லிப்ட் மூலமாக 'சிலை' மேல்தளத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.
மற்ற பசங்களோடு இவனையும் இங்கே நிற்க வைத்து விடலாமா பாஸ்!
நோ! இவனுக்கு முக்கியமானதொரு வேலை உள்ளது. பெட்டியில் போட்டு அடைத்து பாங்கிற்கு அனுப்ப ஏற்பாடு செய்!
அதற்குள் நான் ஹைபர்க் பாங்க் மானேஜரைப் பார்த்து நகருக்கு இன்னுமொரு கலைப் பொக்கிஷத்தை அன்பளிப்பாக தரப் போவதைப் பற்றி பேசிவிட்டு வந்துவிடுகிறேன்!
ஹெ! ஹெ! ஆனாலும் உங்களுக்கு ரொம்பவும் தாராள மனசு தான் பாஸ்!


சில நாட்களுக்குப்பின் ஹைபர்க் நகர பாங்க்கின் முன்வந்து நின்றது ஒரு கவச வண்டி.
எல்லாம் ரெடி!
கதவுகளெல்லாம் பூட்டி-யாயிற்று- பணத்தை இனி இறக்கலாம்!


கவலையே வேண்டாம்- ஒரு பயலால் இங்கு வாலாட்ட முடியாது!
சட்டுப்புட்டென்று இறக்கி முடியுங்கள்! இந்த வாராந்திர பணப்பட்டு வாடாவை முடித்து விட்டு போகும் வரை எனக்கு நிம்மதி கிடையாது!


மானேஜரையும், பாங்க் ஊழியர்களையும் தவிர வேறு யாரும் இங்கே கிடையாது!


காவலாளியின் கணிப்பு தவறானது-
ஆ• அம்மாடியோவ்!


சி-சிலைக்கு உயிர் வந்துவிட்டது- ஆஆஆ!
ஆ ஆ ஆ
சுடுங்கள்!! ம்ம்ம்.


ஆனால்-
ஆஆஆ!
குண்டுகள் தெறிக்கின்றன!
டுமீல்! டுமீல்!


பாங்க் மானேஜர் அறையினுள் அச்சமயம் ஒரே ஒரு வாடிக்கையாளர் இருந்தார்! அது ஸ்பைடர் தான்.
ஆனால் வந்து- மில்லியன் டாலர் கடன் உங்களுக்கு கொடுப்பது சிரமமாயிற்றே!
ஹேய்- துப்பாக்கி வெடியோசை!
அந்தப் பக்கத்திலிருந்து தான் சத்தம் கேட்டது- சமான்!
இதை நானே கவனித்துக் கொள்வேன்- நீங்கள் ஒதுங்கிக் கொள்ளுங்கள்!


கதவைத் திறந்த கணமே குண்டுகள் சரமாரியாக பாய்ந்தன.
இல்லை நானும் வருகிறேன். ஆஹ!


ஸ்பைடர் வந்து தொலைந்து விட்டான்- தப்பவேண்டும் நாம்!
பாதிப் பணத்தை சுருட்டிவிட்டேன்- மிச்சத்தை விட்டுச் செல்ல வேண்டியது தான்!


முனகல் சப்தமொன்றைக் கேட்டு திரும்பினான் ஸ்பைடர்!
அந்தக் காவலாளிகளில் ஒருவன் இன்னமும் உயிரோடிருக்கிறான்!
அவனை நசுக்கித் தள்ளு! அவன் உளறிக் கொட்டினால் நம் திட்டமே தொலைந்தது!


வெறியன்கள்! எதற்கும் சளைத்தவர்களாகத் தெரியவில்லை!
ஸ்பைடரையும் நசுக்கு!


இமைப் பொழுதில் செயல்பட்டான் ஸ்பைடர்!
சே! தப்பி விட்டானே!
இன்னொரு தடவை முயற்சி செய்வதற்கு நேரமில்லை! போ-வோம் வா!
தப்பி விட்டார்களே! சே!
இதைப் பாருங்கள்!


மிஸ்டர் ஸ்டோன் நமக்கு அன்பளிப்பாகக் கொடுத்த சிலையையும் திருட முயன்றிருக்கிறார்கள்! ஏனென்று புரியவில்லையே!
அதற்கான விடை ஸ்பைடருக்குத் தெரிந்திருக்கலாம்!
வேதனையில் முனகிக் கொண்டிருந்த காவலாளியினருகே இருந்தான் ஸ்பைடர்-
கற்சிலை - உயிர் பெற்று வந்து-சிலை-எங்களை தாக்கியது-
பலமாக அடிபட்டுள்ளதா?


ஆம்புலன்ஸை வரவழைத்
திருக்கிறேன்! உடனடியாக
இவனை ஆஸ்பத்திரிக்கு
அழைத்துச் செல்வோம்!
சிலை உயிர் பெற்று
வந்ததா? அதிர்ச்சியில்
பயலின் மறை கழன்று
விட்டது போலும்!
ஆனால் அந்தக்
கற்சிலை தன்
இடத்திலிருந்து
எப்படி விழுந்தது?
புதிராக உள்ளதே!
சார், மானேஜர்
உங்களுடன் பேச
விரும்புகிறார்-


அதிர்ஷ்டவசமாக, மானேஜருக்கு இலேசான காயம் மட்டுமே ஏற்பட்டிருந்தது.
அந்த கொள்ளைக்காரர்களை எப்படியாவது பிடிக்க முடியுமா ஸ்பைடர்! ஏகப்பட்ட பணத்தை திருடி விட்டார்கள்!
நாம் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்வோமா? குற்றவாளிகளை நான் மடக்கி விட்டால், நான் கேட்ட மில்லியன் டாலர் கடனை நீங்கள் தர வேண்டும் சரிதானு?
அவ்வளவு பணம் உனக்கு எதற்கு தேவைப்படுகிறதென்று புரியவில்லை- ஆனாலும் சரி- குற்றவாளிகளை பிடித்து விட்டால் உன் விருப்பம் நிறைவேற்றப்படும்.
அருமை! அந்த அற்பப் பதர்களை விரைவில் உங்கள் முன் கொண்டு வந்து நிறுத்துகிறேன் பாருங்கள்!


பாங்கிற்கு வெளியே ஆர்டினி காத்திருந்தான்.
என்ன நடந்தது பாஸ்!
BANK
RGH
நடந்ததை விட்டுத்தள்ளு ஆர்டினி! நடக்கப் போவது ஒரு யுத்தம்- ஹைடபார்க்கில் இரு முறை கைவரிசையைக் காட்டி விட்ட அந்தக் கயவர்கள் மீது நான் போர் தொடுக்கப் போகிறேன்!
நியூயார்க்கிற்குச் செல்லும் முதல் பிளேனைப் பிடித்து உனக்குத் தெரிந்த ரௌடிகள் அனைவரையும் கூட்டி வா- ஹெலிகாரையும் ஓட்டி வந்து விடு!
ஓ.கே. பாஸ்! ஆனால் நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்!



F-7


என்ன செய்வதா! என்ன கேள்வி கேட்டுவிட்டாயடாபயலே? ஈடு இணையற்ற எனது மதியூகத்தைப் பயன்படுத்தி, நமது முதல் நட-வடிக்கை என்னவாக இருக்க வேண்டுமென தீர்மானிக்கப்போகிறேன்! நடக்கவிருக்கும் இந்தப் போராட்டத்தில் வெற்றி காணப்போவது ஒரே ஒரு நபர்தான்-அது இந்த ஸ்பைடர் தான்!
இதென்னடா புதுக் கூத்து! தனக்கு ஏதாவது ஆதாயம் இல்லாத பட்சத்தில் பாஸ் எந்தக் கேஸையும் எடுப்பதில்லையே!
அதே சமயம்-கற்கோட்டையில்-
நம்மிடம் சேர வேண்டியதில் பாதியை கோட்டைவிட்டு விட்டு வந்து-நிற்கிறீர்களே! எல்லாம் அந்த-அந்த-ஸ்பைடர் நாயால் ஏற்பட்ட வினை! அவனை-புழுவைப் போல நசுக்கப் போகிறேன்!
36


இவனை என்ன செய்வது பாஸ்?
அப்படியே இருக்கட்டும். இவனது உதவி பின்னர் தேவைப்படலாம்! இந்தா! ஆக வேண்டியதைக் கவனி!
நோ! நோ! இது அநியாயம்! காரியம் முடிந்தவுடன் என்னை விடுதலை செய் வதாக சொன்னீர்களே!
சாரி கண்ணு! பாஸ் சொல்வது தான் வேதவாக்கு!


அந்த விசித்திரத் துப்பாக்கியிலிருந்து ஒருவகை நீராவி பீச்சிட்டது!
ஜீபூம்பா!
ப்ளீஸ்-ப்ளீஸ்-ஆஆஆ!
மிஸ்டர் ஸ்டோனின் அட்டகாசத்திற்கு இரையான இன்னொரு அப்பாவி, சலனமின்றிக் கிடந்தான்!
சரியான கிறுக்கன் இவன்! நிஜமாகவே தன்னை விடுதலை பண்ணுவார் என்று நம்பிக் கொண்டிருந்திருக்கிறான்!
யாராவது பாஸின் பாதையில் குறுக்கிட்டால் அவனுக்கு அழிவு நிச்சயம்! அந்த ஸ்பைடர் பயல் பாவம்-!


தனது நிஜ உணர்ச்சிகளை வெளிப்படுத்தாது-தேன் சொட்டச் சொட்ட பேசினான் அந்தக் கல் நெஞ்சன்!
ஹலோ ஸ்பைடர்! உனக்கு ஒரு குட் நியூஸ்! நீ கேட்டுக் கொண்டது போலவே உன்னை மாடலாகக் கொண்டு இன்னுமொரு சிலை செய்து தர தீர்மானித்துள்ளேன்-அதுவும் அன்பளிப்பாக!
உன்னிடம் இருக்கிறதா? நீ செய்து தருவாயா!
தனது போராட்டத்தை உடனடியாக ஒத்திப் போட்டான் ஸ்பைடர்-அவனுக்குத் தான் இனி மில்லியன் டாலர்கள் தேவைப்படாதே!
உடனடியாக வேலையை ஆரம்பிக்க விரும்புகிறேன்! உடனடியாக இங்கு வர முடியுமா ஸ்பைடர்?
நீங்கள் ஃபோனை கீழே வைப்பதற்கு முன்னால் நான் அங்கு வந்து விடுவேன்!


ஸ்பைடரின் தற்பெருமை அவனுடைய ஜென்மஎதிரியின் கையில் நேரடியாகச் சிக்கச் செய்தது-
வாருங்கள் என் ஆத்ம நண்பரே! நாம் வெகுவேகமாக ஆரம்பிக்கலாமே!
ஆனால் அந்தக் கதவு சாத்தப்பட்டதும்-
நான் எப்படி போஸ் கொடுக்க வேண்டுமென்று விரும்புகிறீர்கள்! ஒருக்கால் எனது கடினமான ஆக்ரடிப்பான கோணம் எனது பயங்கரமான அமைப்புகளை அழுத்தமாக காண்பிக்குமல்லவா!
இப்பொழுது நான் அவனைக் கவனிக்கிறேன்!


தன் ஆருவது புலன் விடுத்த மின்னல் வேக எச்சரிக்கையால் சட்டென்று விலகிக் கொண்டான் ஸ்பைடர்-
மடையா! சாதாரண ஆளில்லை இவன்- மீண்டும் தாக்கு!
உப்ப்!


அசுர கதியில் மற்றுமொரு முயற்சியை மேற்கொண்டார் கார்வர்-
மிஸ்டர் ஸ்டேன்- என்ன இதெல்லாம்? அடியாளை என் மீது ஏவிவிட்ட உன்னை நான்- ஊ-ஊப்ப்!


தடுமாறி கீழே விழுந்த ஸ்பைடர் சட்டென்று தன் வலைத்துப்பாக்கியை உருவி எடுத்தான்.
உன் சக்தி முழுவதையும் ஒன்று திரட்டி அவனை தீர்த்துக்கட்டு கார்வர்!
என் ஆற்றல் தெரியாமல் வம்பில் இறங்கிவிட்ட உன் முட்டாள் தனத்துக்கு வகையாக வாங்கிக் கட்டிக்கொள்ளப் போகிறாய்!
எஃகை விட உறுதியான பட்டு இழைகளை உமிழ்ந்தது ஸ்பைடரின் வலைத்துப்பாக்கி-
தடியனாக இருந்துவிட்டால் மட்டும் வீரனாக முடியாது தம்பி!
அஹ்!
முட்டாளே- அவனைச்சுடு!


ஸ்பைடர் தன் வாயுத் துப்பாக்கியை இயக்கினான்.
ஆவ்!
அடுத்து நீ ஸ்டோன்!
அருகே சுவரில் இருந்த ஒரு விசையை பரபரப்போடு சுழற்றினான் ஸ்டோன்.
இவனோடு நேரடியாக நான் மோதத் தேவையில்லை. அதற்கு வேறு ஆட்கள் நிறைய இருக்கிறார்கள் என்னிடம்!


மறுகணம் —
சுதந்திர வேட்கையுடையவர்கள் இந்த எதிரியை கொல்லுங்கள்!
பயத்தில் புத்தி பேதலித்துவிட்டதா இவனுக்கு? அந்தக் கற்சிலைகள் மீது எதையோ பீச்சுகிறான்- அர்த்தமற்ற வார்த்தைகளைப்பிதற்றிக் கொண்டு!
ஆறுல் ஸ்டோன் பீச்சிய திரவம் அந்தச்சிலைகளைத் தொட்ட மாத்திரத்தில்- -
என் ஆணையை நிறைவேற்றுங்கள்- அவனைக் கொல்லுங்கள்- வெற்றி பெற்றவர்களுக்கு உடனே விடுதலை!
இது நிஜம் தானா? பிரமையல்லவே!


இந்த விநோத உருவங்களிடம் என் வாயுத்துப்பாக்கி செல்லுபடி ஆகவில்லையே?
மீண்டும் வலைத்துப்பாக்கி இயங்கவே-
விடாதீர்கள்- அவனை!


கலை நுட்பம் மிளிரும் என் அற்புதச்சிலைகளைப் பற்றிய இரகசியத்தை தெரிந்து கொண்டுவிட்ட உன்னை உயிரோடு வெளியே விட்டால் அத்தோடு தொலைந்தேன் நான்!
மிரட்சியூட்டும் விந்தை சிலைகள் நாற்புறமும் என்னைச்சூழ்ந்து கொண்டு விட்டன!
தப்ப முடியாது ஸ்பைடர்!
மயக்க வாயு இவைகளைப்பாதிக்கவில்லை- இழைகளால் கட்டிப் போட முடியாத அளவுக்குப்பழு உடையவைகளாக இருக்கின்றன!


வலைத்துப்பாக்கியைப் பயன்படுத்தி மேலெழும்பி தப்பித்துக் கொண்டான் ஸ்பைடர்-
இன்னும் நான் தோற்றுப் போய் விடவில்லை ஸ்டோன்!
மீண்டும் தரையில் ஸ்பைடர் இறங்கியபோது-
குஸ்தி பயில்வான் போலிருக்கும் இந்த சிலையைச்சமாளித்துத் தலை நெருங்கி விட்டேனென்றால் தப்பிவிடுவேன்!


அருகேயிருந்த கனமான கற்குவளையைத்தூக்கி விசையோடு எறிந்தான் ஸ்பைடர்-
பலனிருக்குமா?
மறுகணம்.
அட- பரவாயில்லையே!
சிலை உடைந்து விட்டதே!


வியப்பினால் ஒருகணம் தன் நிலை மறந்துவிட்ட ஸ்பைடரைச்சிதறி!
வந்த ஒரு பெரிய கல் தாக்கியது-
ஆவ்!
மாட்டிக் கொண்டான்!
ஸ்பைடருக்குசுயவுணர்வு திரும்பிய போது-
ஸ்பைடர் என்று உனக்குப் பெயர்- ஆனால் இப்போது நீ என் வலையில் சிக்கிக் கிடக்கும் ற்ப ஈ!



வேடிக்கை என்னவென்றால், நீ தாக்கியது என் கலைக்கூடத்தில் இருந்த ஒரே ஒரு நிஜ சிலையை!
பரிதாபமான தவறு!
வெறித்தனமான மகிழ்ச்சியோடு கைகளைத் தேய்த்துக்கொண்டான் ஸ்டோன்-
இன்னொரு குரூரமான ஜோக் என்னவென்றால் உன்னைப்போல ஒரு சிலை வடிக்கவேண்டுமென்ற கோரிக்கையோடு என்னிடம் நீ வந்தாய்- ஆனால் நானே உன்னையே சிலை- ஆக்கிவிடப் போகிறேன்- ஹா! ஹா!
இப்போது எல்லாமே புரிகிறது! கலைக்கூடத்தில் இருந்த சிலை பாங்கில் இருந்த சிலை இரண்டுமே உனக்கு இணங்காத ஆனால் உன்னால் ஆட்டிவைக்கப்பட்ட அடிமைகள்!



சரியாக யூகித்துவிட்டாய்! கற்களை
நான் மனதார நேசிக்கிறேன்-குழந்
தைகளிடம் பெற்றோர் காட்டும் அக்
கறையை கற்களிடம்காட்டுகிறேன்-
என் தீவிர ஆராய்ச்சி, கற்களைப்
பற்றிய சில அபூர்வ உண்மைகளை
நான் அறியச்
செய்தது-
சமுதாயம் அக்கறை காட்டாத அப்
பாவிகளை கவர்ந்து வந்து சிலைக
ளாக்கினேன் .- விசேட கலவை
ஒன்றையீச்சி மீண்டும் அவர்களை
உயிர்ப்பிக்க என்னால் முடியும்!
உன்னால் மட்டுமே அவர்களை மீண்டும்
சாதாரண மானிடர்களாக நடமாட
வைக்கமுடியுமாதலால் உன் ஆணைகளை
ஏற்று அடிமைகளாக இயங்குகிறார்கள்-
இல்லையா!
காட்டு வாத்து கத்துவதுபோலிருந்தது
ல்டோனின் சிரிப்பு-
ஆனால் நீ மீண்டும் மனித உரு
பெறாமல் காலமெல்லாம் கற்
சிலையாகவே நின்று பொடிப்
பொடியாக உதிர்ந்து போகப்
போகிறாய்!
சிலையாக்கிய பின் இவனை
என்ன செய்யப் போகிறீர்கள்
என்ற ஜோக்கையும் இவன்
தெரிந்து கொள்ளட்டுமே-
பால்!



ஆமாம்-நீ சொல்வதும் சரிதான்! திடீரென்று நீ காணாமல் போய் விட்ட பின், அகால மரணமடைந்து விட்டார் தங்களை உய்விக்க வந்த கதாநாயகர் என்று மக்கள் தீர்மானிக்கும் சமயம், நான் உன் உருவச் சிலையை அன்பளிப்பாக கொடுப்பேன்! எதற்காக? இந்த ஹைபர் நகரின் மத்திய சதுக்கத்தில் உனக்கு ஒரு நினைவுச் சின்னமாக அதை நிறுத்த-ஹா-ஹா-!
அதாவது நீயே உனக்கொரு நினைவுச் சின்னமாக நிற்கப் போகிறாய்-கேட்க, வேடிக்கையாயில்லை-ஹா-ஹ-ஹா!
சிரிப்பு மறைந்து கடுகடுப்பு பரவியது ல்டோனின் முகத்தில்-
இப்போது நான் போய் கூடுதல் வீரியம் மிக்க இஞ்செக்ஷனை தயாரிக்கப் போகிறேன்-எனவே, உன் வாழ்நாள் இன்னும் ஒருமணி நேரமே!



அந்த அயோக்கியன் போனபின் சங்கிலியை அறுத்தெறிய ஆனமட்டும் முயன்றான் ஸ்பைடர்-
ஊஹும்-பிரயோஜனமில்லே! நான் பலசாலிதான்-ஆனால் இந்த இரும்புச் சங்கிலியிலிருந்து விடுபட பத்து மடங்குகூடுதலசக்திதேவை!
வருத்தத்தை விஞ்சாபமே அதிகமாக பிரவகித்தது ஸ்பைடரின் மூளையில்-
எப்படியொரு இழிவான முடிவு-எனக்கு! சிலையாக நாற்சந்தியில் நிற்பேன்! ஆர்டினியும் மற்றவர்களும்மரியாதைசெலுத்தஅங்கே வந்து - ஆங்-ஒரு நிமிஷம்! ஆர்டினி! ஆமாம்-அவன் இப்போது நியூயார்க்கிலிருந்து இங்கே வந்து கொண்டிருப்பானல்லவா!
ஸ்பைடரின் நீண்ட விரல்கள் லாவகமாக வளைந்து அவனுடைய கைக்கடிகாரத்திலிருந்த நுண்ணிய விசை ஒன்றை அழுத்தின-
ஸ்பைடரிடமிருந்து ஹெலிகாருக்கு-! ஸ்பைடரிடமிருந்து ஹெலிகாருக்கு-!


ஹைபர் நகரை!நோக்கி விரைந்து வந்து கொண்டிருந்த அந்த அற்புத வாகனம் அப்போது 50 மைல் தொலைவில் இருந்தது-
ஹே-ஆர்டினி! உன் பாஸின் குரல் அல்லவா இது?
குறுக்கே பேசாதே-செய்தியைக் கேள்!
ஆனால் மேற்கொண்டு எந்த வார்த்தையும் கேட்கவில்லை-
அங்கே யாரோ குறுக்கிட்டிருக்க வேண்டும்-எனவேதான் மேலே தொடரவில்லை என்று நினைக்கிறேன்!
அவருடைய இருப்பிடம் தெரிந்துவிட்டது. அது போதும்! புரபஸர் ஹெலிகாரின் உச்ச வேகத்திறனை சோதித்தறிய இது ஒரு சந்தர்ப்பம்!


ஸ்டோன் அங்கே வந்து விட்டதால்தான் ஸ்பைடரால் தொடர்ந்து செய்தியனுப்ப இயலாமல் போயிற்று-
உன் முடிவுகாலம் வந்துவிட்டது ஸ்பைடர்! இதை ஏற்றிய உடனே நீ கல்லாக இறுகி விடும் அசம்பாவிதத்திற்கு ஒரு தொடக்கம் ஏற்பட்டு விடும்!
ஊசியை குத்தும் போது எறும்பு கடித்ததுபோல லேசாக வலிக்கும்- என்னை மன்னித்து விடு-ஹா-ஹா!
எப்படியாவது காலம் தாழ்த்த வேண்டும்- எப்படி? எப்படி? ஆங்- ஒரு அற்புத ஐடியா!


திடீரென்று பீதியால் அலறினான் ல்டோன்-
ஆவ்-எ-எ- என்ன இது-
எல்லாமே ஆடுகிறது இங்கே!
நிலம் இந்த இடத்தில் பிளந்து கொண்டால் நாம் உயிரோடு புதையுண்டு விடுவோம்!
பூமி அதிர்ச்சி!


நில அதிர்வு வலுத்துக்கொண்டே போனது-
ஐயோ-காப்பாற் றுங்கள் என்னை!
நான் பிடித்துக் கொண்டு விட்டேன் உங்களை-பாஸ்!


வா-ஓடிப்போய் விடலாம் இங்கிருந்து!
சீக்கிரம்-ம்-
வழியாக வாருங்கள்!


ஆனல் அப்போது அங்கே வந்து சேர்ந்த கார்வர் வியப்பினல் ஒரு கணம் வாயடைத்துப் போனன்-
குறுக்கே வராதே- வழியைவிட்டு விலகுடா முண்டம்-!
உப்-! இவர்கள் என்னதான் செய்கிறார்கள்?
ஸ்பைடர்கேலியாகக்கொக்கரித்தான்-
இம்முறை கோமாளிப்பட்டம் உனக்குத்தான்ஸ்டோன்! என் ஹிப்னுட்டிஸ சக்தியை பயன்படுத்தி ஒரு நில நடுக்கத்தை உருவகப்படுத்தி உன்னை ஏமாற்றி விட்டேன்!
ஒகே-அதனுல்தான் பால் அப்படி பைத்தியக்காரன் போல் நடந்துகொண்டாரா!
ஸ்பைடரின் வெற்றி அதிக நேரம் நீடிக்கவில்லை-
நி-நின்று விட்டது- நடுக்கம்!
இவனுடைய கைவரிசை அது- பால் உங்களுக்கு பிரமையை உண்டு-பண்ணியிருக்கிறன்!


மறுபடியும் அப்படியொரு சேஷ்டை செய்ய இவனுக்கு வாய்ப்பளிக்கப்போவதில்லை நான்!
ஆபத்தான பேர்வழி இவன்- உடனே இவனுக்கு ஒரு முடிவு கட்டினால்தான் நாம் நிம்மதி யாக இருக்க முடியும்!
ஆனல் ஸ்டோன் ஸ்பைடரை நெருங்கிய போது-
என்ன அது- இரைச்சல்!
ஏதோ கனமான ஒன்று கட்டிடத்தின் மேல் தளத்தில் தரை இறங்கி யிருக்கிறது!


ஹெலிகார் வந்து சேர்ந்தது -
ஆனால் நாம் எப்படி விரைவாக உள்ளே செல்வது? ஒவ்வொரு விநாடியும் யுகம் போன்றது!
அதை நான் அறிவேன் ஆர்டினி! அதற்கொரு உபாயம் இருக்கிறது- இதோ-
சக்தி வாய்ந்த லேஸர் கதிர்கள் தளத்தினூடே இடைவெளியை ஏற்படுத்தின-
கீழே சென்றடைய முழுதாக ஒரு நிமிடம்கூட தேவைப் படாது!
ஆ-ஆமாம்-ஹெலி கார் கீழே நழுவு கிறது!


மறு நிமிடம்-
நான்கு பேரை வீழ்த்தி யாயிற்று-அதற்குள்!
ஜாக்கிரதை-ஆல்-
மிகா-!


அதோ-அவன்தான் தலைவனாக இருக்கும்!
அவர்களை சமாளிக்க நானாயிற்று-பாஸ்!
வேண்டாம்-என்னோடு ஓடிவா!



ஸ்டோனின் நடுங்கும் விரல்கள் மறைவிடத்திலிருந்த ஒரு விசையை அழுத்தின-
பாஸ்- உங்களுக்கு ஆபத்தில்லையே?
பேசிக்கொண்டு நில்லாதே- அவர்களை துரத்திப் பிடி!
-ஆனால்-
அவன் இயக்கிய விசையின் இருப்பிடத்தைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டுமா?
ஊ-ப்!
அதைப்பற்றி அலட்டிக் கொள்ளவேண்டாம்- முதலில் இந்தச்சங்கிலியை அறுத்தெறிந்து என்னை விடுவி!
ஒரு வழியாக நாம் வென்று விட்டோம் பாஸ்!
இருக்கலாம்! ஆனால் இனிமேல்தான் ஸ்டோனுக்கு கஷ்டகாலமே ஆரம்பிக்கப் போகிறது! ஸ்பைடரை முட்டாளாக்க முயற்சியை மேற்கொண்ட இந்த நாளை காலமெல்லாம் நினைவு கூர்ந்து சபித்துக் கொண்டேயிருக்கப் போகிறான்!


அந்த கட்டிடத்தின் கீழே இருந்த ரகசிய சுரங்கப் பாதை வழியே அதிவேக திறனுடைய ஒரு கார் சீறிக்கொண்டு விரைந்தது.
நாசமாய்ப் போகிறவன்- இரண்டாவது சுற்றிலும் வென்று விட்டான்
அடேய் சைத்தானே! வேண்டிய மட்டும் கொக்கரி- ஆனால் இரண்டு நிமிடங்களுக்கு மட்டுமே! அதன் முடிவில் கூண்டோடு கைலாசம் போகப் போகிறாய்!
இரண்டு நிமிடங்களா பாஸ்? அதற்குள் நாம் நிச்சயமாக பாதுகாப்பான இடத்திற்கு சென்றுவிடலாம்!


அங்கே-
என்ன பாஸ். வெற்றி பெற்றவர் மாதிரி இல்லையே. உங்களைப் பார்த்தால்! ஏன் இப்படி முகத்தை தொங்கப் போட்டுக் கொண்டிருக்கிறீர்கள்!
அவன் ஓடிப்போய்விட்டான் ஆர்டினி- அவனுடைய மோசடியை நிரூபிக்கும் ஆதாரங்களை இங்கே அப்படியே விட்டுவிட்டு!
அதற்கு ஒரே ஒரு அர்த்தம் தான் இருக்கிறது. தோழர்களே ஓடி வாருங்கள் என்னோடு! கணமும் தாமதியாமல் நாம் இங்கிருந்து வெளியேற வேண்டும்!


ஏறிக் கொள்ளுங்கள் ஹெலிகாரினுள்! அவனையும் இழுத்து வாருங்கள்!
ஏன் இப்படி பதறுகிறீர்கள் பாஸ்!
மறு நிமிடம் ஹெலிகார் ஜிவ்வென்று மேலெழும்பியது-
உன் கேள்விக்கு அதோ பதில்- தன் குற்றத்திற்கான நிரூபணங்களை ஒரேயடியாக அழித்துவிட்டான் ஸ்டோன்!
நம்மையும் எமலோகம் அனுப்ப திட்டமிட்டிருக்கிறான் அந்த அயோக்கிய நாய்!



தன் சகாக்களை ஹோட்டல் அறைக்கு அழைத்து வந்தான் ஸ்பைடர்! அடுத்த நடவடிக்கை பற்றி திட்டமிட-
இரண்டு கொள்ளைகள் பற்றிய உண்மை விபரங்கள் இப்போது உங்களுக்கு தெரியும் பாஸ்- நாம் ஏன்மேல் நடவடிக்கை எடுக்கும் பொறுப்பை போலீஸார் வசம் விட்டுவிடலாகாது?
ஆமாம்- பாஸ்! மிச்சத்தை அவர்கள் பார்த்துக் கொள்ளட்டும்- எனக்கு இப்போது நியூயார்க்குச்கு நம் சொந்த உறைவிட்த்-திற்கு திரும்புவோம் என்றிருக்கிறது!
ஹூம்- பரிதாபத்திற்குரிய ஜென்மங்கள்! போலீஸாரோ அல்லது நாம் சொல்வதைக் சேட்கும் வேறு எவரேனுமோ சற்சிலைகள் உயிர் பெறுகின்ற சங்கதியை நம்புவார்கள் என்று நினைக்கிறீர்களா?
ஆமாம்- வாஸ்தவம்தான் பாஸ்!


ஆக்ரோஷமாக கர்ஜித்தான் ஸ்பைடர்-
உயிரைக் காப்பாற்றிக் கொள்ளக்கூட யாரிடமும் கெஞ்சியிராத நான் என் உருவச்சிலை ஒன்றை வடிக்குமாறு கெஞ்சிக் கேட்டுக் கொண்டபோது என்னை முட்டாளாக்கி ஏளனமாகச் சிரித்து அவமானப்படுத்திய அந்தத்திமிர் பிடித்த அயோக்கியனை பழி வாங்காகல் விடப் போவதில்லை நான்!
இன்னொரு காரணமும் இருக்கிறது- இப்படியே விட்டு விட்டால் குற்றவியல் சரித்திரத்தில் அவன் என்னையும் மிஞ்சிவிட்டவனாகி விடுவான்! அதை என்னால் சகித்துக் கொள்ள முடியாது. எனவே இது நமக்கும் அவனுக்குமிடையே தனிப்பட்ட யுத்தமாகதானிருக்கும்!


அடங்கிய குரலில் தன் கருத்தை வெளியிட வெளியிட முனைந்தான் ஆர்டினி-
ஆனால்- வந்து- பாஸ்- அந்த கொடியவன் எங்கே போனான் என்று நமக்கு தெரியாதே!
நமக்குத் தெரியாதுதான் ஆனால் இந்த மடையனுக்கு நிச்சயமாக தெரிந்திருக்கும்!
அந்த கொடியவனின் சத்தம் சாட்டையடி போன்று கிரீச்சிட்டது- ஹா!
அந்த கழிசடையை அவிழ்த்துவிட்டு, ஜன்னல் வழியே வீசி எறி!
என்ன- என்ன- பாஸ்- சொன்னீர்கள்!
அடுத்து ஸ்பைடர் விடுத்த உத்தரவைக் கேட்டு அதிர்ச்சியடைந்தனர் அனைவரும்—
வேண்டாம்- கருணை காட்டுங்கள்!
பாஸ்- நீங்கள் சொல்வது?
கேள்வி கேட்கக் கூடாது- சொன்னதை செய்யுங்கள்!


இஷ்டமில்லாமல் தன் பாஸின் ஆணையை அப்படியே நிறைவேற்றினர்-
ஆஆஆ!
விலங்குங்கள்!
ஸ்பைடரின் வலைத்துப்பாக்கியிலிருந்து இழைகள் நீண்டன-
அடுத்த முறை நான் ஆணையிடும்போது ஏதாவது கேள்வி கேட்டால் சும்மா விடமாட்டேன்!
ஸாரி-பாஸ்!


உஷ்ணக்கதிர்களை வெளிப்படுத்தி இழைகளை நொடிப் பொழுதில் அறுத்துவிட என்னால் முடியும். அந்தரத்தில் தொங்கும் அந்தச் சொறிநாய்க்கு எவ்வளவு மனோ திடம் இருக்கிறது என்பது இப்போது விளங்கிவிடும்!
ஒவ்வொரு இழையாக அறுந்து கொண்டே வந்தது- ஒரு கட்டத்தில்-
எனக்குத் தேவையான தகவல் உனக்குத் தெரியும்- வாயைத் திற! இல்லையேல் ஒரு எலும்பு கூட மிஞ்சாது!
வே-வேண்டாம் சொல்லி விடுகிறேன்!


பீதியால் தளர்ந்து போயிருந்த அந்த நபரை மேலே கொண்டு வந்தார்கள்-
எதையாவது பொய்யாக உளறி வைத்தாயோ முழியைத் தோண்டி விடுவேன் ஜாக்கிரதை!
உறுதியாக சொல்லத் தெரியவில்லை எனக்கு. ஆனால் என் யூகம் சரியாகத் தானிருக்கும்- அவர் மலைமீதுள்ள தன் கல்லறை எஸ்டேட்டுக்குப்தான் சென்றிருக்க வேண்டும்!
ஒரு மணி நேரம் கழித்து- தன் சகாக்களும் கைதியும் பயணம் செய்த காரை பின் தொடர்ந்து. ஹெலிகாரில் சென்று கொண்டிருந்தான் ஸ்பைடர்-
கல்லறை எஸ்டேட் என்று குறிப்பிட்டான்! அதற்கு என்ன அர்த்தம் என்று சீக்கிரமே தெரிந்துவிடும்! அவன் சொன்ன மலையை நெருங்கியாயிற்று!


அப்போது-
இதோ!
பாஸ்- நீங்கள் சற்று கீழே இறங்கி வந்து பயலைக் கொஞ்சம் கவனித்தால் நல்லது- பீதியால் அலறுகிறான்!
தன் சகாக்கள் சொன்னதில் மிகை ஏதுமில்லை என்பதைத் தெரிந்து கொண்டான் ஸ்பைடர்-
நீங்கள் என்னை என்ன செய்தாலும் சரி, எனக்கு அக்கறையில்லை! இதற்கு மேல் உங்களை அழைத்துச் செல்ல ஒரு போதும் சம்மதி- யேன்- அங்கே எத்தகைய விபரீதம் நம்மை எதிர்நோக்கி காத்திருக்கிறது என்று உங்களுக்கு தெரியாது!


உயிரை காப்பாற்றிக் கொள்ள வேண்டும்-என்ற வெறி அவனுக்கு அசாத்திய பலத்தைக்கொடுத்திருக்க வேண்டும்-
இதற்கு மேல் நான் வரமாட்டேன்- என்னை விட்டுவிடுங்கள்!
நில்! நீ தப்பிக்க முடியாது- உன் கடமை இன்னும் கொஞ்சம் பாக்கியிருக்கிறது!
ஆனால் ஸ்பைடர் தன் வலைத் துப்பாக்கியை பிரயோகிக்கும் முன்-
ஆ- ஐயோ!
சே- சரிவில் நழுவித்தலை குப்புற விழுகிறான்! இனி அவனிடமிருந்து எந்த உதவியையும் எதிர் பார்க்க முடியாது!



அதையடுத்து கரிய மேகங்கள் சூழ்ந்த இரவு வானில் மின்னல்கள் பளீரிட்டன-
அதோ- அங்கே தெரிவதுதான் கல்லறை எஸ்டேட்டாக இருக்கக்கூடும்!



கீழேயிருந்து தீனமான குரலில் கோரிக்கை ஒன்று வந்தது-
பாஸ்- அந்தப் பயல் இந்தக்கல்லறை எஸ்டேட் பற்றி சொன்ன விபரங்களைக்கேட்டதனுல் கிட்டே நெருங்க நெருங்கக்கைகால் எல்லாம் உதறுகின்றன எங்களுக்கு!


சரியான தொடை நடுங்கிகள்.
இதோ கீழே இறங்கிவருகிறேன்!
சரி- இனி பயணத்தை தொடரலாமா?
நன்றி பாஸ்!
விஷமத்தனமாக அவர்களை கவனித்துக் கொண்டிருந்தன சில விழிகள்-
இந்த கணவாய் பாதை அச்சமூட்டுகிறது பாஸ்!



திடீரென்று சில முரட்டு உருவங்கள் ஆவேசமாக ஓடி வந்தனர்-
யார்; யார் அவர்கள்?
ஸ்டோனின் தயாரிப்புகள்- ஓரளவு கல்லாகிப் போன பலிகடாக்கள்!
மறுகணம்-
ஓடி வாருங்கள்! இவர்களோடு நேரடி மோதலை தவிர்ப்பது நல்லது!


விடாமல் துரத்தி வருகிறார்கள் பாஸ்!
தொடர்ந்து மேலே ஏறமுடியாத-வாறு செங்குத்துப்பாறை தடுக்கிறது!
வலைத் துப்பாக்கியையோ வாயுத் துப்பாக்கியையோ ஏன் அவர்கள் மீது பிரயோகம் செய்யவில்லை!
ஏற்கனவே அனுபவப்பட்டிருக்கிறேன்! அவற்றினால் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்த முடியவில்லை இவர்களிடம்-வேறொரு யுக்தியை கையாண்டு பார்ப்போம்!


மேலே நீட்டிக் கொண்டிருந்த ஒரு பெரும் பாறையை பிணைத்தன வலைத்துப்பாக்கியிலிருந்து கிளம்பிய இழைகள்-
இழுங்கள்- தம் பிடித்து முழு மூச்சாக இழுங்கள்!


அதிர்ஷ்டம் கை கொடுத்தது-
பெயர்ந்து விட்டது!


பலடன் எடையுள்ள அந்தப் பாறை அசுர-
கதியில் கீழே விழுந்தது-
டோல்!!
பாறை சரிவு ஒருவாறுக ஓய்ந்தபோது-
ஒருவர் பாக்கியில்லை-
அத்தனை பேரும் காலி!
இவர்கள் பரிதாபத்திற்குரிய
அப்பாவிகள்- இவர்களை தூண்டி
விட்ட கயவனை தேடிப் பிடித்து
அழிக்க வேண்டும்!


இந்த பாறைகள் உருண்டபோது எழுந்த பேரொலியை அந்த இடி முழக்கம் அமுக்கிவிட்டதால் பிறர் கேட்டு இருக்க முடியாது. எனவே, அங்கே எஸ்டேட்டில் இருப்பவர்களுக்கு நாம் வந்து கொண்டிருக்கும் விஷயம் இன்னும் தெரியாது. வாருங்கள் முன்னேறிச் செல்வோம்!
ஒரு மைல் தொலைவு நடந்தபின் கல்லறை எஸ்டேட்டை வந்தடைந்தனர்..
அமைதியான சூழல்!
உஷ்! ஏதோ ஓசை கேட்கிறது. கூர்ந்து கவனி!


அதோ யாரோ வருகிறார்கள்!
இங்கே யாருமே இல்லையோ என்று ஒருகணம் நினைத்து விட்டேன்!


நெருங்கி வந்தன சில உருவங்கள்-
டிராலி நிறைய கற்கள்!
இதில் ஆச்சரியப்பட ஏதுமில்லை! இந்த விவகாரத்தில் எல்லாமே சற்கனோடு ஏதாவது ஒரு வகையில் சம்பந்தப்பட்டிருப்பதுதான்!


அந்த உருவங்களைக்கூர்ந்து ஆராய்ந்தான் ஸ்பைடர்.
நம்மை அங்கே எதிர்கொண்ட பாதி கல்லாக இறுகிப்போன நபர்களை போன்றவர்களல்ல இவர்கள். இவர்கள் செவ்விந்தியர்கள் என்று தோன்றுகிறது! உணர்ச்சிகளை வெளிப்படுத்தாத அளவுக்கு முகம் இறுகிப் போயிருந்தாலும் இவர்கள் நல்லவர்கள் என்று தோன்றுகிறது!
தீ வட்டி வெளிச்சத்தின் வரம்பினுள் இன்னொரு உருவம் வந்தது.
அவன்? ஸ்டோனின் பட்லர் கார்வர் அல்லவா?


அடிமைப பட்டாளம் அகன்ற பின்-
கார்வர் இங்கிருப்பதால் ஸ்டோனும் இங்குதானிருக்கக்கூடும்! அதி-ரடித் தாக்குதல் மூலம் அவர்களை வெற்றி கொள்ளப் பார்க்கிறோம்!


ஆனால் மறுகணம் பளீரிட்ட ஒரு மின்னல் அவர்களைக் காட்டிக் கொடுத்தது-
பாஸ்- ஸ்பைடர்!
விரட்டிப் பிடிக்க வேண்டும் அவனை- ஓடி வாருங்கள்!



சட்டென்று விழுந்த பெரிய பாறை வழியை மறைத்தது.
சே- நல்ல வாய்ப்பை இழந்து விட்டோம்!
மறைவிடத்திலிருந்த ஓர் ஒலிபெருக்கியில் ஸ்டோனின் குரல் உரத்துக் கேட்டது-
உங்களுடைய மாஸ்டரின் எதிரிகள் நுழைவாயிலில் நிற்கிறார்கள்- உடனே போய் அவர்களை அழியுங்கள்!


அவர்கள் என்னைக் கொன்று விட்டால் உங்களுக்குப்பிறகு விமோசனமே கிடையாது- நினைவிருக்கக்கூடும்!
ஓடி வாருங்கள் என்னைப் பின் தொடர்ந்து!
அவர்கள் நுழைந்த பலகையிலான அறை தூசி படிந்து கிடந்தது!
அதோ வருகிறார்கள்!
பாஸ் நம் அடுத்த நடவடிக்கை என்ன?


அதே கணத்தில்-
ப்பூ- கதவை மிகசுலபமாக தகர்த்துக்கொண்டு வந்து விட்டார்கள்!
வாருங்கள்- இந்தப் பக்கம்!
!!?


இடையில் சிக்கிக் கொண்டு விட்டோம்!
இங்கே நாம் வந்ததே தப்பு- எனக்கு அப்போதே தெரியும்!


ஸ்டோனின் குரல் எக்காளமாக வந்தது-
உன் வசமுள்ள துப்பாக்கிகளை கீழே போடு ஸ்பைடர். இல்லையேல் உடனே தாக்குமாறு என் கைதி-களுக்கு உத்தரவிடுவேன்!
இதோ துப்பாக்கிகளை கீழே எறிந்து விட்டேன்!


ஸ்பைடர் குழுவினரை கைது செய்து தங்களுடைய மாஸ்டரின் முன்னால் கொண்டு போய் நிறுத்தினார்கள்-
இறுதியில் நான்தான் வென்-றேன்- இல்லையா ஸ்பைடர்!
இருக்கலாம்- ஆனால் இந்த அப்பாவிகளுக்கு நீ செய்திருக்கும் மனிதாபிமானமற்ற கொடுமைக்கு நீதி உன்னைச் சும்மாவிடாது!


ஓ- என் இரகசியத்தை தெரிந்துகொண்டுவிட்டாயா? சிலைபோல் இறுகிப் போன இந்த அடிமைகள் இவ்விடத்தில் குடியிருந்த செவ்விந்திய பழங்குடி மக்கள்!
உனக்கு அடிமையாகச்சேவகம் புரிவதைவிட செத்துப் போவதையே அவர்கள் விரும்புவார்கள்போல் தோன்றுகிறது!
கரெக்ட்! ஆனால் இவர்களுடைய குடும்பத்தினர் என் வசம் கைதிகளாக இருக்கின்றனர்! எனவே என் ஆணைகளுக்குக்கீழ்ப்படிவதைத் தவிர வேறு வழியில்லை இவர்களுக்கு!
அப்பாவிகளை இப்படி நீ சித்ரவதை செய்ய ஒரு காரணம் இருக்கவேண்டுமே?


கிசுகிசுத்த குரலில் பதிலளித்தான் ஸ்டோன்.
தங்கம்- ஸ்பைடர்! இந்த மலையில் எங்கோ ஒரு பகுதியில் பெருமளவு தங்கம் இருப்பதாக நம்பகமான செய்தி கிடைத்தது எனக்கு!
நிறையப் பாறைகளை தகர்க்க வேண்டியிருக்கிறது.. பல இலட்சங்கள் பெறுமானம் உள்ள சில இயந்திரங்கள் தேவைப்பட்டன. பணத்திற்கு வழி? அதற்குத்தான் இப்படியொரு சூழ்ச்சித் திட்டங்களை முறியடித்தாய்- அந்த விஷமத்தனக்துக்குறிய விலையை நீ கொடுக்க வேண்டிய தருணம் நெருங்கிவிட்டது- அங்கேயுள்ள குழிக்கு இவர்களைக்கொண்டுசெல்லுங்கள்!


ஸ்பைடர் குழுவை எங்கோ தள்ளிக் கொண்டு போனார்கள்-
உன் முடிவு நெருங்கி விட்டது ஸ்பைடர்- நீ தப்பிக்க வழியே கிடையாது!
அனைற ஆறுவல் அதிக ஆழமில்லாத பள்ளத்தின் விளிம்பில் நிறுத்தப்பட்டனர்-
கீழே பாருங்கள்- என்ன தெரிகிறது!
கீழே அப்படி விசேஷமாக எந்த ஆபத்தும் இருப்பதாகத் தெரியவில்லையே!
90


அப்போது—
ஸ்பைடரின்
கூரிய செவிகள்
'விஸ்ஸ்' என்ற
ஓசையை
கேட்டன.
குதியுங்கள்!
அந்தப் பள்ளத்தினுள்
அவர்கள் குதித்ததும்-
வியப்பூட்டும்
உன் விழிப்புணர்சிக்கு
என் பாராட்டுகள்
ஸ்பைடர்! ஆனால்
விரைவிலேயே உன்
கதை முடியப்
போகிறது
ஆவ்... நாம்
கொஞ்சம் கொஞ்ச
மாகப் புதைகிறோம்!


ஐயோ-தவிர்த்துக் கொள்ள வழியில்லை—
கல் தூசி நிரம்பிய பள்ளம் அது. எல்லோரும் அதில் புதையுண்டு சாவ் போகிறீர்கள்!
ஆனால் ஸ்பைடர் மனம் தளர்ந்து விடவில்லை.
ஹெலி-கார்!


சில விநாடிகளுக்குப்பின்-ஸ்பைடரின் குரலை இனம் கண்டு கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்ட அந்த ஹெலிகார் விரைந்து வந்து தாழ இறங்கியது—
கண்களை இறுக மூடிக் கொள்ளுங்கள் தோழர்களே! கீழே மெல்ல தரையிறங்க பயன்படும் காற்று-ஜெட் அமைப்பை இயக்கப்போகிறேன்.
மறுகணம்—
காற்று-ஜெட்டை தூண்டிவிட்டேன்!



கல் தூசி நாலா திசைகளிலும் பறந்தோடியது—
ஒரு வழியாக வெளியேறி விட்டேன்!
வானுயர எழுந்த தூசிப்படலம் ஸ்பைடரை பிறர் காணாவண்ணம் மறைத்தது.
இதோ- என்னுடைய வலைத்துப்பாக்கியும், வாயு துப்பாக்கியும்! இனி அவர்களோடு மோதிப் பார்த்துவிடலாம்.


ஆனால் ஸ்டோனின் குகையை ஸ்பைடர் நெருங்கியபோது—
அங்கே என்ன நடக்கிறது? ஒரே தூசிப்படலம்- எதையுமே பார்க்க முடியவில்லை!
எங்கே நிற்கிறான் அந்தச் சண்டாளன்?


அப்போது—
அதோ ஸ்பைடர்! எப்படியோ தப்பியிருக்கிறான்.



பிடியுங்கள், அவனை!
ஸ்பைடருக்குக்கொஞ்சம் வருத்தமாக இருந்தது-
ஹூம்... இவர்கள் ஏதுமறியாத அப் பாவிகள். ஆனால் நான் தப்பிக்க வேண்டு மானால், இவர்களோடு சண்டையிட்டுத் தானாக வேண்டும்.


ஸ்பைடர் தூக்கி எறிந்த கனமான கல் நாற்காலியை மிகச்சுலபமாக பற்றி நிறுத்தினான் அந்த அடிமை.
சே...எனக்கிருந்த ஒரே வாய்ப்பும் பயனற்று போய் விட்டது.


அந்த நாற்காலி தன்னைக் குறிவைத்து திரும்பி வந்தபோது சட்டென்று குனிந்து கொண்டு தப்பித்தான் ஸ்பைடர்.


அடுத்து பெரிய பாறை ஒன்று தன்னைக் குறிவைத்து வந்தபோது பாய்ந்து விலகிய ஸ்பைடர் கீழே விழுந்துவிட்டான்
காஸ் ஸிலிண்டர்!- உடைந்துவிட்டது.
அஅ...ஹ!
98



உறுதியான பிடிசட்
டென்று விலகியது!
அட, என்னுடைய கைகள் இயற்கை நிலைக்குத்திரும்பி விட்டனவே!
என்னுடையவையும் தான்! அத்தோடு நம் குரலும்கூட இயற்கையாக ஒலிக்கிறது!
நம்மையழைய நிலைக்கு மீட்கும் வாயு கசிந்து வெளிப்பட்டிருக்கிறது.
ஓ...நாம் பழைய நிலைக்குத்திரும்பி விட்டோம் சுதந்திரமடைந்துவிட்டோம், ஹாஹ...ஹா!


தொலைவிலிருந்து அதைக் கண்ணுற்ற ஸ்டோன் பேயறைந்தவன் போலானான்.
அங்கே இருக்கிறது அந்த காஸ், ஓடுங்கள், நீங்களும் இயற்கை நிலைக்கு மீண்டுவிடலாம்!
பழி தீர்க்க அவர்கள் நம்மை நோக்கி வருமுன் ஓடிப்போய்விட வேண்டும் இங்கிருந்து
ஹெலிகாரை கீழே கொண்டு வந்தான் ஸ்பைடர்.
ஒரு பாவச் செயலுக்கு முடிவு ஏற்பட்டதே போதுமான திருப்தி. இருந்தாலும் உங்களிடம் சில உதவிகளை எதிர்பார்க்கிறேன்.
உங்களுடைய வரவால்தான் எங்களுக்கு சாப விமோசனம் கிட்டியது. பிரதியுபகாரமாக நாங்கள் எந்த உதவியும் செய்ய தயார்


எஸ்டேட் முழுவதும் சல்லடைபோட்டுச் சலித்துவிட்டோம் பாஸ்.ஸ்டோனும் கார்வரும் அகப் படவில்லை !
அவர்கள் இப்போது எங்கே போயிருப் பார்கள் என்று என்னால் யூகிக்க முடியும்!


எங்கேயிருந்து வந்தானோ என்று நீ சொல்வதன் அர்த்தம் விளங்கவில்லை.
காயம்பட்ட விலங்கு காய த்தை குணப்படுத்த தன் வளைக்கு திரும்புவது போல் அந்தக் கிராதகனும் எங்கிருந்து இங்கே வந் தானோ அங்கேயே திரும்பிச் சென்றிருக்கக்கூடும்


அந்த வயதான செவ்விந்தியன்
மலையுச்சியை சுட்டிக் காட்டினான்.
அந்தப்பிரதேசம் பாவப்பட்ட பூமி என்பது தலைமுறை தலைமுறையாக வழங்கி வரும் வழக்கு. ஸ்டோன் ஒரு படுபாவி. என்பதோடு அவன் பாவகாரியங்களையே செய்து வந்ததால் அவனுடைய பூர்வீகம் அந்த மலையுச்சியாகதானிருக்க வேண்டும் என்று உறுதியாக நம்புகிறேன்!
இதுவரை வேறு யாரும் உச்சிக்குச் சென்றதில்லை. மேலே செல்வதற் குரிய பாதை அந்தக் கிராதகன் ஸ்டோனு க்கு மட்டுமே தெரியும்.
ஹெலிகார் என்னை அங்கே கொண்டு சேர்க்கும்!
அவன் அங்கே இருக்கும் பட் சத்தில் நாமும் மேலே சென்று அவனைப் பிடிப்போம்.
இடியும் மின்னலும் இன்னமும் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்தன...
பாஸ்... நாங்களும் உங்களோடு வருவது நல்லதல்லவா?
அவசியமில்லை ஆர்டினி! அந்த ராஸ்கலின் இறுதி அத்தியாயத்தை எழுதுவதில் உள்ள மகிழ்ச்சியை யாரோ டும் பகிர்ந்து கொள்ள நான் இஷ்டப்படவில்லை!


ஆனால் வழியில் ஸ்பைடர் எதிர்பாராத அசம்பாவிதம் நிகழ்ந்தது.
அந்த மின்னல் ஹெலிகாரின் போக்கை திசை திருப்பிவிட்டதே! ஹெலிகாரை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை


திடீரென்று ஹெலிகாரின், எஞ்சின் இயக்கமிழந்து போனது.
மோட்டார் பாதிக்கப்பட்டு பழுதடைந்துவிட்டது போலும்! போய் பாறையில் மோதப் போகிறது ஹெலிகார்.
அருகேயிருந்த பாறையில் குதித்தான் ஸ்பைடர்.
இந்தப் பாறை பயங்கரமாக ஆடுகிறது. ஹெலிகாரின் பழுதாங்காமல் எந்த நிமிடமும் இது இடம் பெயர்ந்து உருண்டிடலாம்!


வலைத்துப்பாக்கியிலிருந்து இடைவிடாது தொடர்ந்து வெளிப்பட்டன இழைகள்.
நான் சென்று திரும்பும்வரை ஹெலி-கார் இங்கேயே தொங்கிக் கொண்டிருக்கும்.
ஆனால்... நேர் மேலே—
அங்கே பார் ஸ்பைடர்!
எக்கச்சக்கமாக நம்மிடம் மாட்டிக் கொண்டு விட்டான்- சட்டென்று ஓடித் தப்ப வழியில்லை, அவனுக்கு!


காரியத்தில் கண்ணாக இருந்த ஸ்பைடர் உருவாகி வந்த ஆபத்தை அறியவில்லை.
குறி தப்பிவிடக் கூடாது கார்வர். இதுமாதிரிவாய்ப்பு இன்னொரு முறை கிடைக்காது!
ஆனால் இம்முறையும் ஸ்பைடரின் ஆறாவது புலன் மின்னல் வேகத்தில் எச்சரிக்கை விடுக்கவே சட்டென்று சுதாரித்துக் கொண்டான்
ஆக, நீங்கள் இங்கேதான் இருக்கிறீர்கள்!


அப்போது வேறொரு இழையைப் பற்றி விலகிக் கொண் டான் ஸ்பைடர்.
என்னை அழிக்க மிக மிக சாதாரன வழியை நீ பின் பற்றுவதை பார்க் கையில் உன்மீது பரிதாபப்படத் தோன்றுகிறது எனக்கு.
அடுத்த தடவை குறித்தப்பவே தப்பாது பாஸ்!
வேண்டாம்! இப்போது நாம் அவனுடைய வாயுதுப்பாக் கியின் எல்லைக்குள் இருக்கிறோம்-ஆபத்து! வா...ஓடிப்போய்விடலாம்.


மலேஆட்டின் லாவகத்தோடு மடவடவென்று மேலே ஏறினுன் ஸ்டோன்.
சீச்கிரமாக மலேயுச்சியை சென்றடைந்துவிட வேண்டும். வா-வேகமாக.
என்னுல் அவ்வளவு வேகமாக ஏற முடியவில்லே பாஸ்.
அதையடுத்து—
அதோ... அங்கிருந்துதான் நான் வந்தேன்? கார்வர்.
என்ன சொல்கிறீர்கள் இங்கே, மலேயுச்சியிலா நீங்கள் பிறந்தீர்கள்?


நினைவு தெரிந்த நாட்களில் இங்கே தான் வாழ்ந்து வந்தேன். என்னை வளர்த்து ஆளாக்கிய அந்த நபரை செவ்விந்தியர்கள் தீய ஆவி என்று கருதுகிறார்கள்!
பாஸ், வந்து- நம்மை துரத்தி வந்த ஸ்பைடர் என்னவானான்? அவனிடம் ஆயுதங்கள் இருக்-கின்றன. ஆனால் நம்மிடம் ஏதுமில்லையே?
ஸ்டோன் வெறித்தனமாக இளித்தான்.
நம்மிடம் ஆயுதமேதுமில்லை என்று சொல்லிவிட முடியாது. இதோ, இறுக வைக்கும் கலவையை பீச்சும் பிஸ்டலில் ஒரு டோஸ் இருக்கிறது கைவசம்!
பிரமாதம் பாஸ்! ஆனால் நீங்கள் கவனமாக குறிவைக்க வேண்டும்-பயல் படு கில்லாடி!
109



வாஸ்தவம்தான் கார்வர். ஒருவேளை அவனை சரியாக குறிவைக்க முடியாமல் போகலாம். எனவே உன்னை குறிவைக்க முடிவு செய்துவிட்டேன்.
பாஸ்...!என்ன இது வே...வேண்—ஆஆ!
ஸ்ஸ்ஸ்...
நாம் இருவருமே உயிர்பிழைக்க இது ஒன்றுதான் வழி, கார்வர். இப்போது, ஸ்பைடர் வசமுள்ள இரண்டு துப்பாக்கிகளுமே உன்னை பாதிக்க முடியாது! அவனை நீ சுலபமாக எதிர்கொண்டு அழிக்க முடியும்.
சக்தி வாய்ந்த கலவை உடனே விளைவை உறுதி செய்தது


ஆணைக்கு கீழ்ப்படி-எல்லாம் நல்லபடியாக நடக்கும். என்னை நீ காப்பாற்று...நீ பழைய நிலைக்கு திரும்ப என் உதவி அவசியம்! மறந்துவிடாதே!
மேகத்திரளினூடேயிருந்து மெள்ள எட்டிப்பார்த்தது நிலா.
இது என்ன! புது தொல்லை.
அதோ வருகிறான், அவனால் உன்னை எதுவுமே செய்ய முடியாது ப்பதை நினைவில் இருத்திக் கொள்.


ஆங்காரத்தோடு தன்னை நோக்கி கார்வர் நெருங்கி வந்த வேளையில், படுவேகமாக சிந்தித்தான் ஸ்பைடர்.
இழைகளை சுலபமாக அறுத்தெறிகிறான்! ஆனால் இவனை வீழ்த்த வேறொரு யுக்தியை கையாளலாம்


ஸ்பைடரின் சூழ்ச்சி பலித்தது.
தன்னை நோக்கி பாறையை அவனே இழுத்து கொண்டுவிட்டான்!
க்ராஷ்!!


அப்போது—
அறிவு கெட்ட முண்டம்- ஸ்பைடரின் சூழ்ச்சிக்கு சுலபமாக பலியாகி விட்டானே!


இதோ உன்னை தேடி ஓடி வருகிறேன் ஸ்டோன்.


இருண்டு கிடந்த குடிசையினுள் ஸ்பைடர் நுழைந்த போது...
ஆ ஹந்..!
ஹேற... நீ எங்கேயிருக்.. ஆவ்!
என்கை வலுத்துவிட்டது ஸ்பைடர். இங்கே உன் உதவிக்கு யாரும் வரமுடியாது. அத்தோடு உன் வசம் இப்போது ஆயுதங்களும் இல்லை!


செத்து தொலை-
உப்ப்ப்!
நடக்காது,
சைத்தானே.
வீண்
அலட்டல்!
உன் முடிவு நெருங்கிவிட்டது ஸ்பைடர்.
இது என் சொந்த பூமி. கையில் கல்
லாலான கத்தி! என் முழுபலமும்
வெளிப்படும் சந்தர்ப்பம் இது. நீ உயிர்
பிழைக்க வாய்ப்பே இல்லை!
ணங்!



பின்னுக்கு நகர்ந்து கொண்டே போன ஸ்பைடர் இறுதியில் சுவரை நெருங்கிய போது...
இனியும் நீ பின் வாங்கிச் செல்ல இடமில்லை! மாட்டிக் கொண்டாய் வகையாக!
என் முடிவு நெருங்கி விட்டது என்பதை,புரிந்து கொண்டேன். உயிரை விடு முன் சில கேள்விகளுக்கு உன்னிடதில் பதிலை தெரிந்துகொள்ள ஆசை.
கார்வர் விசுவாசமுள்ள ஊழியன் உனக்கு. அவனை மறுபடியும் இயற்கை நிலைக்கு நீ திரும்பச் செய்வாயா-அல்லது அப்படியே விட்டு விடுவாயா?
என்ன ஒரு மடத்தனமான கேள்வி!


அருகே ஏற்பட்ட சிறு சலசலப்பை ஸ்பைடரின் கூரிய செவிகள் கேட்கத் தவறவில்லை. ஆனால் திரும்பிப் பார்ப்பதை தவிர்த்தான்.
கார்வர் போன்றவர்களை பற்றி எல்லாம் கவலைப்பட்டுக் கொண்டிருக்க முடியுமா? பயன்படும்வரை வைத்துக் கொள்ள வேண்டியதுதான்! சுமையாகி விட்டால் உடனே தீர்த்து விட வேண்டும். அது-தான் புத்திசாலித்தனம்!
ரொம்ப அலட்சியமாக இதைச் சொல்லி முடித்ததையடுத்து—
போதும், வெட்டிப் பேச்சு. இனியும் உன்னை விட்டு வைத்தா-ஆஆ...வ்


அப்படியொரு விபரீதத்தை கொஞ்சமும் எதிர்பாராத ஸ்டோன் திடுக்கிட்டுப் போய் தடுமாறினான்.
நா..நான் சும்மா அப்படிச் சொல்லேன் கார்வர். என்னை நம்பு. ஸ்பைடரை நையாண்டி செய்ய சொன்ன வார்த்தைகள் அவை!
சட்டென்று மறுபக்கம் திரும்பினன் கார்வர்.
ஐயோ... நானில்லே, அந்த சண்டாளன் ஸ்பைடரின் சூழ்ச்சி இது. நீ மேலேறி வருவதை கவனித்துவிட்டு, நைசாக பேசி என்னை அப்படி சொல்ல ஆவ்-வே..வேண்-டாம் கார்வர்..! ஐயோ!
118


ஸ்பைடர்...
நாசமாகத்தான்
போவாய்-நீ
ஆ:ஆ...!
ஐயோ


ஐயோ! அங்கே
தலைகுப்புற பள்ளத்
தில் விழுகின்ற இரு
வரில் ஒருவன்
ஸ்பைடராக
இருக்குமோ?
ஆஆஹ்!
இல்லை—
அங்கே கவனி
அதோ ஸ்பைடர்!


ஹெலிகாரை ஸ்பைடர் செப்பனிட்டு வந்தபின்-
மறு நாள்—
செவ்விந்தியர்களை அனைத்தையும் விபரமாக எடுத்துரைத்ததால் கேலி சிரிப்புக்கு ஆளாகாமல் கேஸை போலீசார் வசம் ஒப்படைக்க முடிந்தது!
நல்ல காரியம் அது! இனி நாம் நியூயார்கிலுள்ள நம் இருப்பிடத்துக்கு நிம்மதியாக போய்ச் சேரலாம் அல்லவா?
சில வாரங்களுக்கு பின், ஸ்பைடரின் பாசறையில்
என்ன இருந்தாலும் அவரவர்க்கு சொந்த வீடு தான் சொர்கம்!
ஹே, பாஸ்— உங்களுக்கு ஒரு பிரம்மாண்டமானபார்சல் வந்திருக்கிறது!


கூடவே வந்திருக்கும் குறிப்பில் 'ஹைபர்நகர மக்களின் அன்புப் பரிசு' என்று எழுதியிருக்கிறது!
உள்ளே அப்படி என்னதானிருக்கிறது?
பார்சலை பிரித்துப் பார்த்த போது—
ஓ...நோ! பொறு!
கீழே எழுதப்பட்ட சாசனத்தில்- 'கலா ரசிகரும் மதியூகியுமான ஸ்பைடருக்கு' என்று காணப்-படுகிறது! பிரமாதம் தான் இல்லையா!




பிரகாஷ் பப்ளிஷர்ஸ்,
தபால் பெட்டி எண் : 371, 8/D-5, சேர்மன் P.K.S.A.A. ரோடு,
அம்மன் கோவில்பட்டி, சிவகாசி - 626 189. ஆசிரியர் : S. விஜயன்.
அச்சிட்டோர் : தி விஜய் புக்ஸ்,
Phone : 04562 - 75159 / 72649 Fax : 04562 - 75159
E-mail : lion@vsnl.Com